மாண்புமிகு பேரவைத் தலைவர் : விஞக்கள்—விடைகள் முடிவுற்றன.

குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி * இடம் பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

(முற்பகல் 10-00)

(மாண்புமிகு உறுப்பினர்கள் மு. அம்பிகாபதி, மீ. வின்சென்ட், இரெ. இராசமாணிக்கம் எழுந்து நின்ருர்கள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள் தினமும் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று அத்தனை பேரும் எழுந்து நின்ருல் நான் என்ன செய்வது. தயவு செய்து உட்காருங்கள்.

(2) தகவல் கோரல்.

(அ) உறுப்பினர் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளாதது குறித்து.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துப்புரவுப் பணியாளர்களின் உண்ணுவிரதம் பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அதை எடுத்துக் கொள்வது பற்றி...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் அதைக் குறிப் பேட்டிலே ஏற்ற வேண்டும் என்று விரும்பிஞலும் அல்லது அந்த விருப்பத்தோடு பேசிஞலும் சரி, இந்த அவையிலே இருக்கிற விதி முறைகள் அதை அனுமதிக்கவில்லை. அறையிலே வந்து கேளுங்கள். தங்களுடைய கோரிக்கையை அறையிலே வந்து கேட்டால் விவாதிக்கப்படும்.

(3) ஒழுங்குப்பிரச்சினைகள்

(அ) சட்டமன்றக் கட்சி அலுவலகத்தில் அரசியல் கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டுவது குறித்து.

திரு. மீ. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். சட்டமன்றக் கட்சி அலுவலகத்தில் அரசியல் கட்சிகளின் கூட்டத்தை கூட்டலாமா என்ற ஒரு ஒழுங்குப் பிரச்சினையை தலைவர் முன் கொண்டுவருகிறேன்.

''30-3-1978 நாளிட்ட முரசொலியில் 'தலைவர் கலைஞர் தலைமையில் சென்னை மாவட்ட தி.மு.கழக செயல் வீரர்கள் கூட்டம். பேராசிரியர், சாதிக், ப.உ.ச. பங்கேற்பு' என்ற தலைப்பில் மாவட்டச் செயலாளர் ஒருவர் ஒரு அறிவிப்பு கொடுத்திருக்கிருர். சென்னை மாவட்டத்தின், தி.மு.கழகச் செயல் வீரர்கள் கூட்டம் 30-3-1978 வியாழன் மாலை 6 மணிக்கு அண்ணுசாலை சட்டமன்றக் கட்சி அலுவலகத்தில் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

1978 மார்ச் 31]

கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர், பொருளாளர் சாதிக் பாட்சா, துணைப் பொதுச் செயலாளர் ப.உ.ச. ஆகியோர் பங்கேற்கின்றனர்.

வட்டக்கழக — பகுதிக் கழகச் செயலாளர்கள் — நிர்வாகிகள் துணை-சார்பு மன்ற நிர்வாகிகள்—மாவட்டக் கழகப் பிரதிநிதிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், சட்டமன்ற-நாடாளுமன்ற (பேரவை-மேலவை) உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னணியினர் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்றுச் செயல்வீரர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வேண்டுகிறேன். ஆர்.டி.சீதாபதி, செயலாளர், சென்னை மாவட்ட தி.மு.க.'' என்று இப்படிப் பட்ட அந்த அறிவிப்பு வந்திருக்கிறது. சட்டமன்ற கட்சி அலுவல கத்தில் கூட்டத்தைக் கூட்டுவது சட்டமன்ற எதிர்கட்சித் தலைவரா அல்லது செயலாளரா இல்லை, மாவட்டச் செயலாளரா? சட்ட மன்றக் கட்சி அலுவலகம், அந்தக் கட்சியின் சட்டமன்ற உறுப் பினர்கள் கூடுவதற்கா அல்லது அரசியல் கட்சி செயல்வீரர்கள் கூடுவதற்கா ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமருங்கள். புரிந்து கொண்டேன். நம்முடைய விதிகளிலே தெளிவாக அவைகளை எடுத்துக் காட்டவில்லை. சட்டமன்றக் கட்சி அலுவலகத்தில் கட்சியினுடைய கூட்டத்தைக் கூட்டலாமா வேண்டாமா என் பதற்கு விதிகள் தெளிவாக இல்லை. இரண்டாவது, கட்சியின் தலைவர்களே சட்டமன்ற உறுப்பினர்களாகவும் இருப்பதால் இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாக் கட்சிகளிலும் நடைபெறு கின்றன. ஆகவே, அதைப்பற்றி விதிகளை தெளிவாக ஏற்படுத்தித் தருவார்களானால் பிறகு அதைக் கடைப்பிடிக்கத் தயாராக இருக்கிறேன்.

(2) தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) திருமணமாகாத உறுப்பினர்கள் அரசால் அளிக்கப்பட்ட ரயில் பிரயாண சலுகையை எப்படிப் பயன்படுத்துவது என்பது குறித்து.

திரு. துரை முத்துசாமி: தலைவர் அவர்களே, நேற்றைய தினம் தமிழக அரசு அறிவித்த அறிவிப்பிலே சட்டமன்ற உறுப் பினர்கள் தங்கள் துணைவியருடன், பெண்ணாக இருந்தால் தங்கள் துணைவருடன் 5,000 கிலோ மீட்டர் ரெயிலிலே பயணம் செய்ய அனுமதித்திருக்கிறார்கள். ஆனால் திருமணம் ஆகாத உறுப்பினர்கள் நாஞ்சில் வின்சென்ட், சின்னசேலம் சுப்பிரமணியம் போன்றவர்கள் அந்த 5,000 கிலோ மீட்டர்களை எப்படிப் பயன்படுத்துவது, என்று அறிய விரும்புகிறேன்.